(அ) மற்றும் (ஆ): ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் தேவையான அளவுக்கு பணியிடங்களைத் தற்போது ஏற்படுத்தியுள்ளோம்.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் புரட்சித் தலைவியினுடைய எண்ணங்கள் எல்லாம் நிறைவேறுகிற வகையில் வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அவ்வாறு செய்துகொடுத்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அடுத்த ஆண்டிலாவது இது நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்த மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்கள் மற்றும் பேராமெடிக்கல் ஸ்டாப் தேவையான அளவுக்கு அங்கே இடங்கள் உருவாக்கப்பட்டுவிட்டன. ஆனால் இருக்கிற சங்கடம் என்னவென்றால் நமக்கு இருக்கிற நிதிப்பிரச்சினை காரணமாக, வேறிடத்தில், அதாவது அதிகமாக எங்கெங்கு இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் மாற்றி அந்த இடத்திற்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே வெகு விரைவாகவே காலியிருக்கிற இடங்களை நிரப்பி மருத்துவமனைக்கு வேண்டிய முழு வசதிகளையும் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 105, திரு. என். ஆர். ராஜேந்திரன்; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

105--

காட்டுமன்னார் கோயிலிலிருந்து கள்ளக்குறிச்சிக்கு பேருந்து வசதி அளித்தல்.

***20000- திரு. என்.ஆர். ராஜேந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) காட்டுமன்னார் கோயிலிலிருந்து கள்ளக்குறிச்சிக்கு பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும்?

1993 டிசம்பர் 31]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைப் பொறுத்தவரையில் நாங்கள் பஸ் கேட்டபோதெல்லாம் கொடுத்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அதேநேரம் எனது காட்டுமன்னார்கோயில் தொகுதி தொழிற்சாலைகள் ஏதும் இல்லாத பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அங்கிருந்து மோட்டார் உதிரிப்பாகங்கள் மற்றும் சில அத்தியாவசியப் பாகங்களை நாங்கள் வாங்க வேண்டுமென்றால் சேலம், நாமக்கல், தலைவாசல், திருவண்ணாமலை போன்ற பகுதிகளுக்குத்தான் செல்லவேண்டி இருப்பதால் நாங்கள் இரண்டு, மூன்று பேருந்துகள் மாறிச் செல்ல வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். ஒரு நாளில் சென்று திரும்ப வேண்டிய அந்த தூரத்திற்கு இரண்டு நாள் சென்றுவரவேண்டியுள்ளது. அதுமட்டுமல்லாமல் கள்ளக்குறிச்சியில் உள்ள அரசு அதிகாரிகள் நிறையபேர் காட்டுமன்னார்கோயிலிலிருந்து சென்று பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் லீவு நாட்களில் சென்றுவரும்போது அந்த பயண நேரத்திலேயே லீவு கழியும்படி ஆகிவிடுகிறது. அதனால் எனது தொகுதி மக்கள் நலன் கருதி இதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.25

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காட்டுமன்னார்கோயிலிலிருந்து கள்ளக்குறிச்சிவரை நேரடியாகப் பேருந்து இயக்கப்படுமா என்ற கேள்வியை எழுப்பி இருக்கிறார்கள். ஆனால் அதற்கான சாத்தியக்கூறு இல்லை என்று நான் இங்கே கூறினேன். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலே இருந்து காட்டுமன்னார்குடியிலிருந்து விருத்தாசலம் வரை பேருந்து இயக்கிக் கொண்டு இருக்கிறோம். அதேபோல, விருத்தாசலத்திலிருந்து கள்ளக்குறிச்சி வரையிலே 2 பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ 16 நடைகள் நம்முடைய தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலும், 12 நடைகள் தனியார் போக்குவரத்துக் கழகத்திலும் அங்கே இயக்கிக்கொண்டு இருக்கிறோம். நேரடியாக பேருந்து இயக்க

முடியாததற்குக் காரணம் அதிலே பயணிகள் அதிகமாக இருக்காது என்று ஆய்வு செய்ததன் காரணமாக இயக்கமுடியவில்லை என்ற கருத்தை நான் இங்கே கூறியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை மீண்டும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

106--

கிருட்டிணகிரி நீர்த்தேக்கத்தில் இருபுறக் கால்வாய்களில் தூர் எடுத்தல்.

****14532-திரு. கா. பூ. முனுசாமி:***

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கிருட்டிணகிரி நீர்தேக்கத்தில் இருபுறக் கால்வாயும் தூர் எடுக்காததால் தண்ணீர் சேதமாவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி நீர்த் தேக்க இருபுறக் கால்வாய்களிலும் தூர் வாரும் பணிகளுக்காக 1993, 1994-ஆம் ஆண்டுகளுக்கு ரூ. 2,60,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் செயலாக்குதலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வேலை முழுவதும் முடிக்கப்பட்டுள்ளது. அந்தக் கால்வாய்களில் இப்போதுகூட தண்ணீர் சீராகச் சென்றுகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 25 கிலோமீட்டர் நீளமுள்ள இந்தக் கால்வாய் 1952 ஆம் ஆண்டிலே வெட்டப்பட்ட கால்வாய் ஆகும். இந்தப் பிரதானக் கால்வாயிலிருந்து கிளைக் கால்வாய்களுக்கு செல்லக்கூடிய இடங்களில் உள்ள மதகுகள் 1952ஆம் ஆண்டிலே போடப்பட்டதாகும். அந்த இரும்புக்கதவுகள் நிறைய இடங்களிலே பழுதுப்பட்டிருக்கின்ற காரணத்தினால் தண்ணீர் தேக்கம் அந்த இடங்களிலே அதிகமாகி கரைபுரண்டு வெளியிலே செல்கின்ற காரணத்தினால் ஆங்காங்கு நேரடியாக தண்ணீர் செல்லாமல் வேறு இடங்களுக்குச் செல்லக்கூடிய